**டிசம்பர் – 05**

# TNPSC துளிகள்

- ❖ டிசம்பர் 06 ஆம் தேதியினை "மைத்ரி திவாஸ்" (நண்பர்கள் தினம்) என்ற தினமாக கொண்டாட இந்தியாவும், வங்காளதேசமும் முடிவு செய்துள்ளன.
    - "மைத்ரி திவாஸ்" என்பது 1971 ஆம் ஆண்டு, டிசம்பர் 06 அன்று வங்காளதேசம் விடுதலை பெறுவதற்கு 10 நாட்களுக்கு முன்பு இந்தியா அதனை அங்கீகரித்த ஒரு தினத்தினைக் குறிக்கிறது.
- ❖ வாரணாசி, புனே, கொல்கத்தா மற்றும் விஜயவாடா விமான நிலையங்கள், முகத்தை அடையாளம் காணும் தொழில்நுட்பம் அடிப்படையிலான அங்க அடையாளத் தொழில் நுட்பம் சார்ந்த நுழைவு முறையை முதன்முதலில் அறிமுகப்படுத்த உள்ளன.
    - இந்திய விமான நிலைய ஆணையமானது டிஜியாத்ரா என்ற கொள்கையின் ஒரு பகுதியாக இத்தொழில்நுட்பத்தினைச் செயல்படுத்துவதற்கு NEC கார்ப்பரேஷன் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தினை ஈடுபடுத்தியுள்ளது.
- ❖ வாகா எல்லை முதல் டோர்காம் எல்லை வரையில் இந்தியாவினால் வழங்கப்படும் மனித நேய உதவிப் பொருட்களை ஏற்றுக் கொள்வதற்கு ஆப்கானிய நாட்டுச் சரக்கு வாகன உந்துகளுக்கு அனுமதி வழங்கப்படும் என்று பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.
    - பாகிஸ்தானின் கைபர் மாவட்டத்தில் டோர்காம் எல்லைக் கடவுப்பாதை அமைந்து உள்ளது.
- ❖ 2022 ஆம் ஆண்டு பெய்ஜிங் ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக் போட்டிகளுக்காக ஒலிம்பிக் கால தற்காலிகப் போர் நிறுத்தம் கடைபிடிக்கப் படும்.
    - 2022 ஆம் ஆண்டு, பிப்ரவரி 04 அன்று தொடங்கும் ஒலிம்பிக் போட்டிகளுக்கு முந்தைய ஏழு நாட்களிலிருந்து பாராலிம்பிக் போட்டிகள் முடிந்து ஏழு நாட்கள் வரையில் இது கடைபிடிக்கப்படும்.

# தமிழ்நாடு செய்திகள்

## புதைபடிமம் சாரா எரிபொருள் மூலங்களிலிருந்து 40% மின் உற்பத்தித் திறன்




- ❖ இந்தியாவில் நிறுவப்பட்டுள்ள மின் உற்பத்தி நிலையங்கள் அதன் 40% இலக்கை புதை

படிமம் சாரா எரிபொருள் மூலங்களிலிருந்துத் தயாரித்துள்ளன.

- CoP 21 மாநாட்டில் இந்தியா தனது தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்கீடுகளின் ஒரு பகுதியாக, 2030 ஆம் ஆண்டுக்குள் புதைபடிமம் சாரா எரிபொருட்களிலிருந்து 40% மின் உற்பத்தித் திறனை அமைக்கும் இலக்கை எட்டுவதற்கு இந்தியா உறுதியளித்தது.
- 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலேயே இந்தியா தனது இலக்கை எட்டியுள்ளது.
- இந்தியாவில் நிறுவப்பட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறன் 150.05 GW ஆகும்.
- அணுசக்தி சார்ந்த மின் உற்பத்தி திறன் 6.78 GW ஆகும்.
- இது புதைபடிமம் சாரா எரிபொருள் அடிப்படையில் நிறுவப்பட்ட மொத்த ஆற்றல் திறனை 156.83 GW ஆக திரட்டியுள்ளது.
- இது நிறுவப்பட்ட மொத்த மின் உற்பத்தித் திறனான 390.8 GW அளவில் 40.1% ஆகும்.

## 1817 பைக்கா புரட்சி




- ஒடிசாவின் 1817 ஆம் ஆண்டு பைக்கா புரட்சியினை தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கழகத்தின் 8 ஆம் வகுப்பு வரலாற்றுப் பாடப் புத்தகத்தில் ஒரு நேர்வு ஆய்வாகச் சேர்க்க உள்ளது.
- மத்தியக் கலாச்சாரத் துறை அமைச்சர் கிசன் ரெட்டி சமீபத்தில் இந்தப் பரிந்துரையை அளித்துள்ளார்.
- பைக்காக்கள் என்போர் 16 ஆம் நூற்றாண்டு முதல் ஒடிசா அரசர்களால் பல்வேறு சமூகக் குழுக்களில் இருந்து படையில் சேர்க்கப்பட்டவர் ஆவர்.
- வாடகை இல்லாத நிலம் (நிஷ்-கர்-ஜாகிர்ஸ்) மற்றும் பட்டங்களுக்குப் பதிலாக அவர்கள் பாதுகாப்புச் சேவைகளை வழங்கினர்.
- இவர்கள் ஒடிசாவின் பாரம்பரிய நில உரிமையாளர்களாகவும், போர் வீரர்களாகவும் விளங்கினர்.
- 1803 ஆம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனியின் படைகள் ஒடிசாவின் பெரும்பாலான பகுதிகளைக் கைப்பற்றிய போது, குர்தாவின் அரசர் தனது அதிகாரத்தை இழந்தார்.
- அதனைத் தொடர்ந்து பைக்காக்களின் கௌரவம் வீழ்ச்சியுற்றதனால் அவர்கள் கிழக்கிந்தியக் கம்பெனியை எதிர்த்துக் கலகம் செய்தனர்.
- பிரிட்டிஷ் அரசு இந்தப் பிரச்சினையை ஆய்வு செய்வதற்கு வால்டர் ஈவர் என்பவர் தலைமையில் ஓர் ஆணையத்தை அமைத்தது.

## ZyCov - D

- கோவாக்சினை அடுத்து இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட 2வது தடுப்பு மருந்து சைகோவ்–டி ஆகும்.
- சைகோவ்–டி முதலில் ஏழு மாநிலங்களில் வழங்கப்பட உள்ளது.
- அவை தமிழ்நாடு, பீகார், மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட், பஞ்சாப், மேற்கு வங்காளம் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகியனவாகும்.
- இந்தத் தடுப்பு மருந்தானது 12 முதல் 19 வயதிற்குட்பட்ட வயதினருக்கு மட்டுமே வழங்கப் பட உள்ளது.
- இது 3 தவணையிலான ஒரு தடுப்பூசி ஆகும்.
- இதன் முதல் தவணை 28வது நாளிலும், இரண்டாவது தவணை 56வது நாளிலும் வழங்கப்படுகிறது.
- சைகோவ்–டி, 66% செயல்திறனை வழங்கியது.
- இந்தத் தடுப்பு மருந்தானது கடிலா ஹெல்த்கேர் என்ற இந்திய மருந்து உற்பத்தி நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டது.
- சைகோவ்–டி மருந்தானது பிளாஸ்மிட் டி.என்.ஏ. என்பதில் உருவாக்கப்பட்டது.




## தடுப்பு மருந்திற்கான உத்வேக தவணை

- INSACOG (இந்திய SARS Cov-2 மரபியல் மன்றம்) மன்றமானது சமீபத்தில் கோவிட்-19 தடுப்பு மருந்திற்கான உத்வேக தவணையைப் பரிந்துரைத்தது.
- 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு அதனை வழங்க இது பரிந்துரைத்துள்ளது.
- நாட்டில் ஓமைக்ரான் அச்சுறுத்தல்களை நடுநிலைப்படுத்துவதற்காக வேண்டி இந்த

ஆலோசனையானது வழங்கப்படுகிறது.




## டயர்களிலிருந்து மறுசுழற்சி செய்யப்பட்ட ரப்பர் (கிரம்ப் ரப்பர்)

- சாலைகள் அமைக்கப்படும் போது நிலக்கீழ் நடைபாதைகளில் டயர்களிலிருந்து மறு சுழற்சி செய்யப்பட்ட ரப்பர்களைப் பயன்படுத்துவதற்கு அரசு முடிவு செய்துள்ளது.
- நிலக்கீழ் நடைபாதைகள், அடித்தள அடுக்கு, பிணைப்பு அடுக்கு மற்றும் மேல்தள அடுக்கு போன்று வெவ்வேறு அடுக்குகளில் கட்டமைக்கப் படுகின்றன.
- கிரம்ப் ரப்பர் என்பது டயர் கழிவுகளை மறுசுழற்சி செய்வதன் மூலம் அல்லது இதர ரப்பர்களை சீரான துணுக்குகளாக மாற்றுவதன் மூலம் உருவாக்கப்படும் மறுசுழற்சி செய்யப்பட்ட ரப்பர் ஆகும்.




## SRESTHA திட்டம்

- பட்டியலிடப்பட்ட சாதி வகுப்பினைச் சேர்ந்த மாணவர்களுக்காக SRESTHA என்ற ஒரு திட்டத்தினை இந்திய அரசு தொடங்க உள்ளது.

- இத்திட்டமானது மாணவர்களுக்கு இருப்பிட வசதியுடன் கூடிய கல்வியை வழங்கும்.
- இத்திட்டத்தினைச் மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்புத் துறை அமைச்சகம் செயல்படுத்த உள்ளது.

## முல்லைப் பெரியாறு அணை குறித்த ஐக்கிய நாடுகளின் அறிக்கை




- உலகின் மிகப்பெரிய அணைகளில் 93% அணைகளானவை 25 நாடுகளில் அமைந்து உள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- ஒரு அணையின் சராசரி ஆயுட்காலம் 50 ஆண்டுகள் ஆகும்.
- ஆனால் 1895 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட முல்லைப் பெரியாறு அணையானது நிலச் சரிவு ஏற்படும் அபாயம் உள்ள பகுதியில் (அவ்வப்போது நிலநடுக்கம் ஏற்படும் பகுதி) அமைந்துள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- இந்தியாவின் முல்லைப் பெரியாறு அணை உடைந்தால் 3.5 மில்லியன் மக்கள் பாதிக்கப் படுவர்.
- இந்த அணை குறிப்பிடத்தக்க கட்டமைப்பு குறைபாடுகளைக் கொண்டுள்ளது.
- மேலும் இந்த அணையின் மேலாண்மையானது கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களுக்கிடையில் ஒரு சர்ச்சைக்குரியப் பிரச்சினையாக உள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## CARAT பயிற்சி

- அமெரிக்க இராணுவ வீரர்கள் மற்றும் வங்கதேசக் கடற்படை வீரர்கள் ஆகியோர் இணைந்து 27வது வருடாந்திர ஒத்துழைப்புத் தயார்நிலை மற்றும் பயிற்சிக்கான ஒரு கடல்சார் பயிற்சியினைத் தொடங்கின.
- 9 நாட்கள் அளவிலான இந்தப் பயிற்சியானது பெரும்பாலான கடற்படைத் திறன்களின் மீது கவனம் செலுத்துகிறது.

- மேலும் சுதந்திரமான, தடையற்ற இந்தோ பசிபிக் பகுதியை உறுதி செய்வதற்காக வேண்டி அமெரிக்காவும், வங்காளதேசமும் ஒன்றிணைந்து செயல்படுவதன் திறனை எடுத்துரைக்கும் ஒத்துழைப்பு நடவடிக்கைகளையும் இது உள்ளடக்கியது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## GJ 3676

- வானியலாளர்கள் சமீபத்தில் GJ 3676 என்ற சிறு கோளினைக் கண்டறிந்தனர்.
- இது மங்கலான சிவப்புக் குள்ள நட்சத்திரத்தினைச் சுற்றி வரும் ஒரு சிறிய கோளாகும்.
- இது சூரியனிடமிருந்து 31 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது.
- GJ 3676 என்பது இதுவரை அறியப்பட்ட இலகுவான வெளிக் கோள்களில் ஒன்றாகும்.
- இந்தக் கோள் தனது சுற்றுப்பாதையை 7.7 மணி நேரத்தில் நிறைவு செய்கிறது.
- எனவே இது மிகக் குறுகிய காலம் கொண்ட கோள் என அழைக்கப்படுகிறது.



# மாநிலச் செய்திகள்

## President's Colour விருது

- இமாச்சலப் பிரதேச காவல்துறையானது சிம்லாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க ரிட்ஜ் மைதானத்தில் President's Colour (குடியரசுத் தலைவரின் வர்ணம்) என்ற விருது வழங்கும் விழாவினை நடத்தியது.
- இந்த நிகழ்ச்சியில் ஆளுநர் அவர்கள் President's Colour விருதினை இமாச்சலப் பிரதேச மாநிலக் காவல்துறைக்கு வழங்கினார்.
- இந்தப் பெருமையைப் பெறும் இந்தியாவின் 8வது மாநிலக் காவல்படை இமாச்சலப் பிரதேசக் காவல்துறையாகும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## நிசாமுதீன் பஸ்தி திட்டம் – பாரம்பரிய விருதுகள்

- யுனெஸ்கோ அமைப்பானது சமீபத்தில் டெல்லியின் நிசாமுதீன் பஸ்தி திட்டத்திற்கு 2 பாரம்பரிய விருதுகளை வழங்கியது.
- இத்திட்டத்தின் வளங்காப்பு முயற்சிகளுக்காக இந்த விருதானது வழங்கப்பட்டது.

- இது நிலைத்தன்மை விருது மற்றும் சிறப்பு விருது ஆகிய இரு விருதுகளைப் பெற்றது.
- நிசாமுதீன் பஸ்தி திட்டமானது ஒரு நகர்ப்புற மறுசீரமைப்புத் திட்டமாகும்.
- இது நிசாமுதீன் பஸ்தியின் 7 நூற்றாண்டு கால பழமையானக் குடியேற்றத்தின் பிளவு பட்ட மண்டலங்களை வெற்றிகரமாக ஒருங்கிணைத்தது.




## கீதா கோபிநாத்



'Positive Impact On Ecos, Lives'

- This is the first time that two women are occupying the top two jobs at IMF
- Current first deputy managing director Geoffrey Okamoto will leave the fund early next year

"Over the past three years I have had opportunity to experience first-hand and be a part of hugely important work done by IMF at the intersection of rigorous economic analysis and public policy. It has been so gratifying to see the positive impact of our work on economies and lives of so many people worldwide

**Gita Gopinath**, CHIEF ECONOMIST AT IMF

- இந்திய அமெரிக்கரான கீதா கோபிநாத், சர்வதேச நாணய நிதியத்தின் முதல் துணை நிர்வாக இயக்குநராகப் பொறுப்பேற்றுள்ளார்.
- இந்த அமைப்பின் முக்கியப் பொறுப்பை ஏற்ற முதல் இந்தியர் இவரே ஆவார்.
- அதில் நிர்வாக இயக்குனர் பதவிக்கு அடுத்த படியாக துணை நிர்வாக இயக்குனர் பதவி

உள்ளது.

# முக்கிய தினங்கள்

## இந்தியக் கடற்படை தினம் – டிசம்பர் 04

- டிரைடன்ட் என்ற ஒரு நடவடிக்கையை நினைவு கூறும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் இந்தியக் கடற்படை தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த நடவடிக்கையானது 1971 ஆம் ஆண்டு, இந்தியா - பாகிஸ்தான் போரின் போது கராச்சித் துறைமுகத்தைத் தாக்குவதற்காக இந்தியக் கடற்படையினால் தொடங்கப் பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'இந்தியக் கடற்படைப் போருக்கான தயார் நிலையிலுள்ள நம்பகமான மற்றும் ஒத்திசைவான படை' (Indian Navy – Combat Ready, Credible and Cohesive) என்பதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★